[1987 நவம்பர் 17

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு தலைவர் அவர்களே, திட்ட ஒப்புதல் பெற்று திட்டம் 1987-88 ஆம் நிதி ஆண்டில் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். விரைவில் இந்தப் பணிகள் முடிவுறும்.

ஆணைகுட்டம் நீர்த்தேக்கம்.

152—(* வினா எண் 12284) திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

விருதுநகருக்கு கட்டப்பட்டு வரும் ஆணைகுட்டம் நீர்த் தேக்கத்தில் இருந்து குடிதண்ணீர் கொடுக்கப்படுமா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகருக்கு, கட்டப்பட்டு வரும் ஆணை குட்டம் நீர்த்தேக்கத்திலிருந்து குடிநீர் எடுப்பதற்கான சாத்தியக் கூறுகள் எதும் பரிசீலனையில் இல்லை. ஆனால் விருதுநகருக்கு உடனடிக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்குவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டு, துவங்கப்பட்டுள்ளன.

திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு வேளாண்மைத்துறை அமைச்சர் அவர்கள் சொல்லும்போது விருதுநகருக்கு குடிநீர்த் திட்டம் வேறு வகையில் செயல்படுகிறது என்று சொன்னார்கள். இந்த ஆணைக்குட்டம் அணைக்கட்டுக்குப் பக்கத்திலேதான் விருது நகருக்கு இப்போது தண்ணீர் சப்ளை செய்யக்கூடிய ஆணைக் குட்டம் நீர் ஏற்று நிலையம் இருக்கிறது. விருதுநகருக்கு கோடை காலத்தில் தண்ணீர் சப்ளை செய்யும் எஸ் எஸ் டாங்கும் பக்கத்திலே 1 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது. எனவே இறையெல்லாம் கருத்தில் கொண்டு கட்டப்பட்டு வரும் ஆணைக் குட்ட நீர்த்தேக்கத்தினுடைய தண்ணீரை விருதுநகருக்குக் கொடுத்தால், தண்ணீர் இல்லாத பஞ்ச காலத்திலே மிகவும் கஷ்டப்படுகிற மக்களுக்குத் தண்ணீர் கிடைக்க வாய்ப்பாக இருக்கும் என்று கருதுகிறேன். அதை அமைச்சர் அவர்கள் செய்து கொடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகருக்கு நல்லதொரு குடிநீர்த் திட்டம் தீட்டப்பட்டு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. தற்போது

1987 நம்பர் 17]

போது மெட்ராஸ் சிமெண்ட்ஸ் லிமிட்டெட்டுக்குச் சொந்தமான கல் குவாரியிலிருந்து தண்ணீர் எடுக்க, மெட்ராஸ் சிமெண்ட்ஸ் நிறுவனத்திற்கும் விருதுநகர் நகராட்சிக்கும் ஒரு ஒப்பந்தம் உருவாகியிருக்கிறது. அந்த ஒப்பந்தத்தின்படி கல் குவாரியிலிருந்து 30 குதிரைத் திறன் கொண்ட நீரேற்று இயந்திரங்கள் மூலமாக தண்ணீர் இறைக்கப்பட்டு, கல்நார் சிமெண்ட் குழாய்கள் மூலமாக 18 கிலோ மீட்டர் தூரத்திற்கு அப்பாலுள்ள விருதுநகருக்கு தண்ணீர் தருவதற்கான ஏற்பாடுகள் நடைபெற்றுக் கொண்டு வருகின்றன. விரிவுபடுத்தப்பட்டுள்ள பகுதிகளில் 3 லட்சம் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்டுவதற்கும் ஏற்பாடாகியிருக்கிறது.

திரு. எ. எஸ். எ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, ஒண்டிப்புலிநாயக்கனூர் கல் குவாரியிலிருந்து தண்ணீர் கொடுக்கப்படும் என்று குறிப்பிட்டார்கள். அந்தக் கல் குவாரியிலிருந்து தண்ணீர் எடுப்பது நீண்டகாலத்திற்கு வருமா என்ற சந்தேகம் இருக்கிறது. ஆனைக்குட்டம் நீர்த்தேக்கமானது விருதுநகர் தொகுதியில் இருக்கிறது. விருதுநகர் தொகுதியில் உள்ள இந்த நீர்த்தேக்கத்தில் இருந்து தண்ணீர் பாசனத்திற்காக சிவகாசிக்குச் செல்கிறது. எனவே விருதுநகர் தொகுதியில் உள்ள ஆனைக்குட்டம் நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் விருதுநகருக்குக் கிடைத்தால், மக்கள் நல்ல முறையில் பயன் அடைவார்கள். இதைப்பற்றி பொதுப்பணித்துறை அமைச்சர் அவர்களிடமும் கையெழுத்து வாங்கி அந்தக் கோரிக்கை கொடுக்கப்பட்டது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொதுப்பணித்துறை அமைச்சரோடு கலந்து பேசி, நல்லதொரு திட்டத்தை அறிவிப்பார்களா?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, ஏற்கெனவே நகராட்சிக்கும் மெட்ராஸ் சிமெண்ட்ஸ் நிறுவனத்திற்கும் ஒப்பந்தம் ஏற்பட்டுத்தான் முடிவாகியிருக்கிறது. இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது 1986 ஆம் ஆண்டு. ஆகவே, 138 லட்சம் ரூபாய் செலவில் இந்தத் திட்டம் போடப்பட்டிருக்கிறது. ஆகவே இதிலிருந்து தண்ணீர் கிடைக்கும் என்று கருதி எல்லாவற்றையும் ஆராய்ந்துதான் திட்டமிட்டிருக்கிறார்கள். புதிய திட்டம் தற்போது எதுவும் இல்லை.